பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
19 01 2025 12 40
ஞாயிற்றுக்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கிய தலைவர்களுக்கு தனது சிரம் தாழ்ந்த வணக்கத்தை தெரிவித்துக்கொள்வதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. தேசிய பேரிடர் மீட்புப் படையின் செயல்பாடுகள் மகத்தானது என்று உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா பாராட்டு தெரிவித்துள்ளார்.

3. நாட்டின் பொருளாதார கொள்கைகள் உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்து வருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

4. நைஜீரியாவில் எரிபொருள் ஏற்றிச் சென்ற டாங்கர் லாரி வெடித்து ஏற்பட்ட விபத்தில் 77 பேர் உயிரிழந்தனர்.

5. ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ரோஹன் போபண்ணா - சீனாவின் **Shuai Zhang** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

*<u>--- இனி விரிவான செய்திகள்---</u>*

<<<<>>>>

அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கிய தலைவர்களுக்கு தனது சிரம் தாழ்ந்த வணக்கத்தை தெரிவித்துக்கொள்வதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அகில இந்திய வானொலியில் இன்று காலை ஒலிபரப்பாகிய மன் கி பாத் நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்தார்.

குடியரசு தினத்திற்கு ஒருநாள் முன்னதாக தேசிய வாக்காளர் தினம் கடைபிடிக்கப்படுகிறது.

இதே நாளில் உருவாக்கப்பட்ட இந்திய தேர்தல் ஆணையம் தனது செயல்பாடுகள் மூலம் நாட்டின் ஜனநாயக நடைமுறைகளை வலுப்படுத்தியுள்ளதாக அவர் கூறினார்.

பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா குமபமேளா சமத்துவம் மற்றும் சகோதரத்துவத்தின் சங்கமமாக உள்ளது என்று தெரிவித்தார்.

விண்வெளி துறையில் இந்தியா மேலும் மகத்தான சாதனை படைத்துள்ளதாக பிரதமர் கூறினார். இதன் மூலம் விண்வெளியில் இரண்டு செயற்கைக்கோள்களை இணைக்கக்கூடிய தொழில்நுடபத்தைக் கொண்ட நான்காவது நாடாக இந்தியா உருவெடுத்து.

இதற்காக அரும்பணியாற்றிய விஞ்ஞானிகளுக்கு அவர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

சென்னையில் உள்ள தகவல் தொழில்நுட் கல்வி நிறுவனம் மேற்கொண்டு வரும் ஆய்வுப் பணிகளி நீரின்றி கான்கீரிட் கட்டுமானங்கள் போன்ற செயல்பாடுகளை மேம்படுத்தி வருவதாக அவர் கூறினார்.

இதுகுறித்து டிடி-தமிழ் தொலைக்காட்சிக்கு சிறப்பு பேட்டியளித்த சென்னை ஐ.ஐ.டி.யின் **Extem** மையத்தின் ஒருங்கிணைப்பாளர் திரு. சத்யன் சுப்பையா, விண்வெளியில் புவிஈர்ப்பு விசையற்ற நிலையில் வெல்டிங் மூலம் விண்வெளி கட்டுமானங்களை உருவாக்குவது தொடர்பான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

சந்திரனில் இருந்து பெறப்பட்ட மண் மாதிரிகள், கண்ணாடி இழை பயன்பாடு குறித்த ஆய்வுகளிலும் இந்த மையம் ஈடுபட்டு வருவதாக திரு. சத்யன் சுப்பையா கூறினார்.

பிரதமரின் மன் கி பாத் உரையை மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன், நீலகிரி மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் கட்சித் தொண்டர்கள் மற்றும் மக்களுடன் இணைந்து கேட்டார்.

இதன் தமிழாக்கம் சென்னை அகில இந்திய வானொலி இன்றிரவு எட்டு மணிக்கு மறு ஒலிபரப்பும் செய்யப்படும்.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

**<<<<>>>>**

தேசிய பேரிடர் மீட்புப் படையின் நிறுவன தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இத்தினத்தை ஒட்டி தேசிய பேரிடர் மீட்புப் படையினருக்கு உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், இயற்கை பேரிடர் போன்ற இக்கட்டான தருணங்களில் தேசிய பேரிடர் மீட்புப் படையின் செயல்பாடுகள் மகத்தானது என்று குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் பாதுகாப்பிற்காக அரசு மேற்கொண்டு வரும் உறுதியான நடவடிக்கைகளின் சின்னமாக தேசிய மீட்புப் படை திகழ்கிறது என்று புகழாரம் சூட்டினார்.

பேரிடர் மீட்புப் பணிகளின்போது தனது இன்னுயிரை தியாகம் செய்த வீரர்களுக்கு திரு. அமி மரியாதை செலுத்தினார்.

<<<<>>>>

நாட்டின் பொருளாதார கொள்கைகள் மற்றும் மத்திய அரசு செயல்படுத்தி வரும் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து உலக நாடுகள் உன்னிப்பாக கவனித்து வருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், டிஜிட்டல் தொழில்நுட்ப முன்னேற்றம் அனைத்து மக்களுக்கும் பயனளிக்கும் வகையில் உள்ளது என்று கூறினார்.

இந்தியாவில் செயல்படுத்தப்பட்டு வரும் டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் மீது உலக நாடுகள் ஆர்வம் காட்டி வருவதாகவும் குறிப்பிட்டார்.

சுவிட்சர்லாந்தில் நடைபெறும் உலகப் பொருளாதார மன்றக் கூட்டத்தில் டிஜிட்டல் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் விரிவாக எடுத்துரைக்க உள்ளதாக அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<>>>>

நைஜீரியாவில் எரிபொருள் ஏற்றிச் சென்ற டாங்கர் லாரி வெடித்து ஏற்பட் விபத்தில் 77 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.

வட மத்திய நைஜர் மாகாணத்தின் சுலேஜா பகுதியில் பெட்ரோல் ஏற்றிச் சென்ற டாங்கர் லாரி கட்டுப்பாட்டை இழந்து கவிழந்து விழுந்ததில் இந்த விபத்து ஏற்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

விபத்து நிகழ்ந்த இடத்தில் மீட்புப் பணிகள் நடைபெற்று வருவதாகவும், காயமடைந்த பலர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் அந்த செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ரோஹன் போபண்ணா - சீனாவின் **Shuai Zhang** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மெல்பர்னில் இன்று நடைபெறுவதாக இருந்த கலப்பு இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அமெரிக்காவின் **Taylor Townsend –** மொனாக்கோவின் **Hugo Nys** இணை காயம் காரணமாக வெளியேறியதை அடுத்து, இந்த இணை வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

<<<<>>>>

உலகக்கோப்பை கோ-கோ போட்டியின் ஆடவர் மற்றும் மகளிர் இறுதி ஆட்டங்கள் இன்று நடைபெறுகின்றன.

புதுதில்லியில் நடைபெற உள்ள மகளிர் இறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று – நேபாளத்தை எதிர்கொள்கிறது.

இப்போட்டி மாலை 6 மணிக்கு நடைபெறுகிறது.

ஆடவர் இறுதி ஆட்டத்திலும் இந்தியா இன்று நேபாளத்தை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இரவு மணி 7.45க்கு தொடங்குகிறது.

<<<<>>>>

19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக்கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்தில் முதலில் பேட் செய்து வரும் வெஸ்ட் இண்டீஸ் அணி சற்று முன் வரை --- ஓவரில் --- விக்கெட் இழப்புக்கு --- ரன் எடுத்துள்ளது.

கோலாலம்பூரில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பந்துவீச தீர்மாணித்தது.

**<<<<The End>>>>**